# நாட்டார் நம்பிக்கைகள்

**முனைவர் த.மினி**
**உதவிப்பேராசிரியர்,முஸ்லிம் கலைக்கல்லூரி**
**திருவிதாங்கோடு**

**ஆய்வுச்சுருக்கம்**

அறிவு நிலைக்கு அப்பாற்பட்ட எண்ணங்களே மக்களால் உருவாக்கப் பட்டு அம்மக்கள் சமுதாயத்தால் பாதுகாக்கப்படுகின்றனர். மனிதனின் தன்னல உணர்வும் சமுதாய உணர்வுமே நம்பிக்கைகளை வளர்த்து வருகின்றன. நம்பிக்கைகள் காலம் காலமாக தொடர்ந்து வந்து கொண்டு தான் இருக்கின்றது. இயற்கைக்கு அப்பாற்பட்ட செயல்களை உணராத பொழுதும் மனித வாழ்வில் ஏற்படும் சில நிகழ்ச்சிகளுக்கு காரணம் கற்பிக்க இயலாத பொழுதும் மனித மனமானது சிலவற்றைப் படைத்து காரணம் கற்பித்து கொள்கிறது. அவைகளே நம்பிக்கைகளாக உருவாகின்றன.

இவ்வாய்வில் நாட்டார்களிடையே காணப்படுகின்ற நம்பிக்கைகள் நம்பிக்கை பற்றிய அறிஞர்களின் கருத்துக்கள், நம்பிக்கைகளின் வகைகளான குழந்தை பற்றிய நம்பிக்கைகள், பருவமடைதல் பற்றிய நம்பிக்கைகள், திருமணம் பற்றிய நம்பிக்கைகள், கர்ப்பிணிப் பெண்கள் பற்றிய நம்பிக்கைகள், மழைப்பற்றிய நம்பிக்கை, விருந்தினர் பற்றிய நம்பிக்கைகள், மரணம் பற்றிய நம்பிக்கைகள், எமன் பற்றிய நம்பிக்கைகள் ஆராயப்பட்டுள்ளது.

**முன்னுரை**

நம்பிக்கைகள் மக்களின் மனங்களிலேயே உறைகின்றன. ஆதலில் அவற்றைச் சேகரிப்பது இயலாது. ஆனால் நம்பிக்கைகள் பற்றிய வெளிப்பாடுகளைத் தொகுக்க முடியும். ஒரு சமுதாயத்தின் காணப்படும் நம்பிக்கையைக் கொண்டு அச்சமுதாயத்தினைப் அறிந்துக் கொள்ளலாம் இந்த தனிமனித நம்பிக்கை காலப்போக்கில் சமுதாய நம்பிக்கையாக மாற்றம் பெறுகின்றது.

**நம்பிக்கை பற்றிய அறிஞர்களின் கருத்துக்கள்**

நம்பிக்கைகள் பற்றி பல்வேறு அறிஞர்கள் கருத்து தெரிவித்துள்ளனர். “மக்களின் அறிவு, நம்பிக்கை, கலை, ஒழுக்கம், சட்டம், வழக்கம் முதலியவை தாம் பண்பாடாக மலர்கின்றன என்கிறார் மானுடவியல் பேரறிஞர் டெய்லர்”.

நம்பிக்கைகள் “தனிமனிதனின் சுயமான ஆக்கமாகவோ பண்பாட்டினுடைய தனிசிறப்புக் கூறாகவோ அமையும் பண்பாட்டின் ஏனைய அம்சங்கள் இன்றி சடங்குகளிலேயே வெவ்வேறு நாகரிகங்களின் நம்பிக்கைகளும் இலட்சியங்களும் மிகத் தெளிவாக வெளிப்படுத்தப்படுகின்றன என்கிறார் ரூத்பெனிடிக்”

“புனித பொருள்களின் முன்னால் மனிதன் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் எனக் கூறும் ஒழுக்க விதிகளே நம்பிக்கைகள் என்கிறார் ரூர்கைம்” என்னும் சமூகவியல் பேரறிஞர்.

நாட்டார் நம்பிக்கைள்



Bharath Institute of Higher Education And Research
பாரத் உயர்கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம்,கலை மற்றும் அறிவியல் புலம்,தமிழ்த்துறை
பன்னாட்டு ஆய்வுக்கருத்தரங்கம்
"தமிழ் இலக்கியங்களில் உலக இலக்கியச் சிந்தனைகள்"
பிரணவ் தமிழ் மின்னியல் ஆய்விதழ் சென்னை volume:1 Issue:3 October 2022.
ISSN:2582-9599

பண்டை காலம் முதல் மனிதன் இயற்கையோடியைந்து வாழ்ந்து வருகிறான். இயற்கை மாறுதலுக்கேற்ப மனித மனமும் மாறுபடுகின்றது. இயற்கையோடு இயைந்து நம்பிக்கைகள் தோன்றலாயின.

கூகை அலறினால் சாவு வரும் என்ற நம்பிக்கை பண்டைய தமிழரிடையே இன்றும் நிலவி வருவதை அறியலாம். இதனிடையே,

“அஞ்சு வரு குரா அல் குரலும் நூறு;றும்” (புறம் 280)

அதாவது அஞ்சத்தக்க கூகையும் குரலெடுத்து அலறும் என்று புறநானூறு கூறுகின்றது.

தலைவனை எதிர்நோக்கும் தலைவிக்கு இடது கண் துடித்தால் தலைவன் விரைவில் வருவான் என் நம்புகின்றனர். இதனையே,

“நல் எழில் உண்கணும் ஆடுமால் இடனே” (கலித்தொகை : 11) அதாவது நம் அழகை உடைய மையுண் கண்ணும் இடந்து்டியா நிற்கும் என்று தலைவி தோழிக்குக் கூறியதாக கலித்தொகை பாடல் அமைந்துள்ளது.

“நுண் ஏர் புருவத்த கண்ணும் ஆடும்” ஐஐங்குநுறுறு : 218ஸ

என்று ஐங்குறுநூற்று பாடல் மூலம் பெண்களுக்கு இடக்கண்ணும் ஆண்களுக்கு வலக்கண்ணும் துடித்தல் நன்னிமித்தம் என்பது நாட்டார் நம்பிக்கையாக உள்ளதை அறியமுடிகிறது.

நல்ல காரியங்களைப் பற்றி பேசிக் கொண்டிருக்கும் போது விளக்கு அணைத்தால் நல்ல சகுனமாக கருதுவதில்லை. இந்த நம்பிக்கை இந்தியா முழுவதும் உள்ளது.

நம்பிக்கைகளின் வகைகள்

நாட்டார் மக்களிடையே எண்ணற்ற நம்பிக்கைகள் நிலவுகின்றன.

குழந்தை பற்றிய நம்பிக்கைகள்
பருவமடைதல் பற்றிய நம்பிக்கைகள்
திருமணம் பற்றிய நம்பிக்கைகள்
கர்ப்பிணிப் பெண்கள் பற்றிய நம்பிக்கைகள்
மழை பற்றிய பெண்கள் பற்றிய நம்பிக்கைகள்
விருந்தினர் பற்றிய நம்பிக்கைகள்
மரணம் பற்றிய நம்பிக்கைகள்
எமன் பற்றிய நம்பிக்கைகள்

குழந்தை பற்றிய நம்பிக்கைகள்

திருமணமான பெண்கள் விரைவில் தாய்மை அடைந்து விட வேண்டும் என விரும்புவர். குழந்தை இல்லையெனில் சமுதாயத்தின் தூற்றலுக்கு ஆளாகவேண்டுமே என எண்ணினர். குடும்பத்தின் பெயர் சொல்ல வாரிசு வேண்டும் என விரும்பினர். அதற்காக பெண்கள் அரச மரத்தைச் சுற்றி வந்து அடிவயிற்றைப் பார்த்தாளாம் என்ற பழமொழியே வழக்கிலுள்ளது வெள்ளிக்கிழமை விரதமும் பிள்ளைப்பேற்று நோன்புகளாகும்.

பருவமடைதல் பற்றிய நம்பிக்கைகள்

திங்கள், புதன், வியாழன், வெள்ளி ஆகிய நாட்களில் பூப்படைதல் நல்லது. சித்திரை மாதம் பருவமடைந்தால் கணவனுக்கு நல்லதல்ல. வைகாசி மாதம் பருவமடைந்தால் செல்வம் செழிக்கும். புரட்டாசி



Bharath Institute of Higher Education And Research
பாரத் உயர்கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம்,கலை மற்றும் அறிவியல் புலம்,தமிழ்த்துறை
பன்னாட்டு ஆய்வுக்கருத்தரங்கம்
"தமிழ் இலக்கியங்களில் உலக இலக்கியச் சிந்தனைகள்"
பிரணவ் தமிழ் மின்னியல் ஆய்விதழ் சென்னை volume:1 Issue:3 October 2022.
ISSN:2582-9599

மாதம் பருவமடைந்தால் பொருட்சேதம் உண்டாகும். கார்த்திகை மாதம் பருவமடைந்தால் புண்ணியவதியாக இருப்பாள். பங்குனி மாதம் பருவமடைந்தால் பதிவிரதையாக இருப்பாள் என்ற பலவிதமான நம்பிக்கைகள் காணப்படுகின்றன.

**திருமணம் பற்றிய நம்பிக்கைகள்**

இரண்டு திருமணங்கள் ஒரே வீட்டில் ஒரே நேரத்தில் நடந்தால் ஒரு குடும்பம் தாழ்நிலை அடையும். திருமணத்திற்கு பின் மணப்பெண்ணை வெள்ளியன்று கணவன் வீட்டிற்கு அனுப்பக் கூடாது. ஆடி மாதத்தில் பெண் பார்த்தால் நல்லதல்ல. திருமணமான மணமக்களை மஞ்சள் கலந்த அரிசியால் வாழ்த்த வேண்டும். புதுமண தம்பதிகள் புதுவீட்டில் குடியேறக்கூடாது. ஆடி மாதத்தில் கணவனும், மனைவியும் ஒன்றாக இருக்க கூடாது. ஆடி மாதத்தில் உறவு ஏற்படின் கோடை காலமான சித்திரையில் குழந்தை பிறக்கும். அது தாய்க்கும் உடல்நலம் கருதி நல்லதல்ல என்ற எண்ணத்தில் இப்படியொரு நம்பிக்கை தோன்றியிருக்கலாம்.

**கர்ப்பிணி பெண்கள் பற்றிய நம்பிக்கைகள்**

கர்ப்பமாக உள்ளவர்கள் தலைவாசலில் தலை வைத்துப் படுக்கக் கூடாது. கர்ப்பிணி பெண்கள் விரும்பும் பொருள் வாங்கி கொடுக்காவிட்டால் குழந்தையின் காதில் சீழ்வடியும் என நம்பகின்றனர். கர்ப்பிணி பெண்கள் வலது கையை ஊன்றினால் பெண்குழந்தை பிறக்கும் என நம்புகின்றனர். கர்ப்பிணி பெண்கள் அதிகமாக வாந்தி எடுத்தால் ஆண்பிள்ளையும், குறைவாக வாந்தி எடுத்தால் பெண் குழந்தையும் பிறக்கும் என நம்புகின்றனர்.

மழை பற்றிய நம்பிக்கைகள்

வடக்கே – தெற்கே மின்னல் தோன்றினால் மழை வரும் என நம்புகின்றனர். நிலவைச் சுற்றி பெரிய வட்டமாக இருந்தால் மழைப்பெய்யும் என்றும் சிறியதாக இருந்தால் மழைப்மொழிய சில நாட்கள் ஆகும் என்றும் நம்புகின்றனர். ஆடு கூடி கூடி அலைந்தால் மழை வரும் கறுப்பு எறும்பு (கட்டெறும்பு) முட்டைத் தூக்கிச் சென்றால் மழை வரும். கோழி சிறகை விரித்து மண்ணில் பதுங்கினால் மழை வரும். நரி ஊருக்கள் வந்தால் மழை வரும் என்று நம்புகின்றனர்.

விருந்தினர் பற்றிய நம்பிக்கைகள்

காகம் கரைந்தால் விருந்தினர் வருவர் என்ற நம்பிக்கை உள்ளது. விருந்தினர் விளக்கு வைத்த பின்பு செல்ல வேண்டும் இல்லாவிட்hல் நம் வீட்டு இலட்சுமி அவர்களோடு போய் விடும் என நம்புகின்றனர். முதன் முறையாக வீட்டிற்கு வரும் விருந்தினர்க்கு அசைவ உணவு படைக்க கூடாது. உறவு முறிந்து விடும். முதன் முதலாக விருந்தினர்கள் வியாழன்றும் ஞர்யிறு அன்றும் ஒரு வீட்டில் உண்ணக்கூடாது விருந்தாளி வாழை இலையை உள்பக்கம் மடித்தால் திரும்ப வந்து சாப்பிடும் பாக்கியம் கிடைக்கும். விருந்தினர்களுக்கு சேவல் கறி படைக்க கூடாது என நம்புகின்றனர்.

மரணம் பற்றிய நம்பிக்கைகள்

ஒருவர் மார்கழித் திருவாதிரை நாளிலோ- ஏகாதசியன்றோ இறந்தால் அவர் பெரும்பேறு செய்ததாக நம்பப்படுகின்றனர். சனிக்கிழமையன்று ஒருவர் இறந்தால் மற்றொரு சாவு விரைவில் நடைபெறும் என்று நம்பினர். எனவே தான் சனிப்பிணம் தனியே போகாது என்று கூறுகின்றனர். சில இடங்களில் சனியன்று இறந்த பிணத்துடன் கோழியையும் புதைப்பர். மரணம் அடைந்த நேரம் பகல் என்றால் நிறைநாழி நெல்


Bharath Institute of Higher Education And Research
பாரத் உயர்கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம்,கலை மற்றும் அறிவியல் புலம்,தமிழ்த்துறை
பன்னாட்டு ஆய்வுக்கருத்தரங்கம்
"தமிழ் இலக்கியங்களில் உலக இலக்கியச் சிந்தனைகள்"
பிரணவ் தமிழ் மின்னியல் ஆய்விதழ் சென்னை volume:1 Issue:3 October 2022.
ISSN:2582-9599

பிணத்தருகில் வைக்க வேண்டும். இறந்தவர்களுக்கு செய்யும் ஈமக்கிரியையால் இறந்த உயிர் வீடுபேறு அடையும் என நம்புகின்றனர்.

எமன் பற்றிய நம்பிக்கைகள்

நமக்கு விதிக்கப்பட்ட காலம் முடிந்தவுடன் எமன் வந்து உயிரைக் கவர்ந்து செல்வதாக மக்கள் நம்புகின்றனர். அவரவர் செய்த நன்மை, தீமைகளுக்கேற்ப உயிர் வெவ்வேறு உலகங்களுக்கு செல்வதாக மக்கள் நம்பகின்றனர்.

**முடிவுரை**

மனித வாழ்வில் காணப்படும் நம்பிக்கைகளை பார்க்கும் போது அவர்களுடைய உளப்பாங்கு தெளிவாக அறிய முடிகிறது. மக்களிடையே காணப்படுகின்ற நம்பிக்கைகளை ஆராயும் பொழுது அவர்களின் பழக்கவழக்கங்கள், நாகரீகம், கலாச்சாரத்தினை தெளிவாக பார்க்க முடிகின்றது. தமிழக மக்கள் இப்போதும் நம்பிக்கைகளை பின்பற்றி வருகின்றனர் என்பதும் ஆய்வில் ஆராயப்பட்டுள்ளது. மனித வாழ்வில் காணப்படும் நம்பிக்கைக்கு காரணம் அறிய முடியவில்லை என்றாலும் மனித சமுதாயம் நம்பிக்கைகளுக்கு வயப்பட்டுத்தான் இயங்குகிறது என்பது இவ்வாய்வில் புலனாகின்றது.

**துணைநூற்பட்டியல்**

1 டாக்டர் சு. சக்திவேல்,நாட்டுப்புற இயல் ஆய்வு.மணிவாசகர் பதிப்பகம்,31, சிங்கர் தெரு, பாரிமுனை,சென்னை - 600108

2 முனைவர். அ. தட்சிணாமூர்த்தி,ஐங்குறுநூறு (புத்தகம் ஐ),நியூ செஞ்சுரி புக்ஹவுஸ் (பி),41பி, சிட்கோ இன்டஸ்டிரியங் எஸ்டேட்,அம்பத்தூர், சென்னை - 600098

3 முனைவர் கு.வெ. பாலசுப்பிரமணியன்.புறநானூறு (புத்தகம் 2),நியூ செஞ்சுரி பக் ஹவுஸ் (பி) லிட்,41பி, சிட்கோ இன்டஸ்டிரியல் எஸ்டேட்,அம்பத்தூh சென்னை - 600098;

4 முனைவர். அ. விசுவநாதன்,கலித்தொகை (மூலமும் உரையும்),நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்,41பி, சிட்கோ இன்டஸ்டிரியல் எஸ்டேட்,அம்பத்தூர், சென்னை - 600798